இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 17.06.2026

# வேதனையில் உழவர்கள்!

**‘நான் அடுத்த பிறவியில் உழவனாகப் பிறக்க வேண்டும்’ என்று டயலாக் விட்டார் முதலமைச்சர் விஜய். இப்போது இந்தப் பிறவியில் உழவர்களை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார். விஜய் ஆட்சியில் அதிக வேதனையில் இருப்பவர்கள் உழவர்கள் தான். நாடு முழுவதும் உழவர்கள் அதிகப்படியான போராட்டங்களை தினமும் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.**

வாக்குறுதிகள் என்ற பெயரில் போலியான பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார் விஜய். அதை நம்பி வாக்களித்துள்ளார்கள் மக்கள். அத்தகைய வாக்குறுதிகளில் ஒன்று பயிர்க்கடனை முழுமையாக ரத்து செய்வேன் என்பது ஆகும்.

**“5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்கள் வைத்திருக்கும் பயிர்க்கடனில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்” என்று விஜய் அள்ளி விட்டார். இப்போது என்ன செய்துள்ளார் என்றால்... கூட்டுறவு வங்கிகளில் ரூ.50 ஆயிரம் வரை பயிர்க்கடன் பெற்ற குறுவிவசாயிகளுக்கு முழுமையாகப் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும். அதற்கு மேல் இருந்தால் அந்தக் கடனில் 50 விழுக்காடு வரை கடன் தள்ளுபடி செய்யப்படும். இந்தக் கடன் தள்ளுபடி திட்டமும் 2025 மே 1 முதல் 2026 பிப்ரவரி 28 வரை கடன் பெற்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று ஒட்டுமொத்தமாக ஏமாற்றி இருக்கிறார் விஜய். இந்த வகையில் மொத்தமே ரூ.2 ஆயிரம் கோடி தான் தள்ளுபடி செய்துள்ளார் விஜய். இது நாடு முழுவதும் அவர் மீது கடும் கோபத்தை உருவாக்கி உள்ளது.**

இதனைச் சமாதானப்படுத்துவதற்காகப் பயிர் தொகுப்பு ஒன்றை முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார். இதனால் எந்தப் பயனும் இல்லை என்று உழவர்கள் சொல்லி விட்டார்கள். “காவிரி நீர் இல்லாமல் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் அறிவிப்பது வீண். கர்நாடகாவில் இருந்து தண்ணீர் பெற்றுத் தரும் வழியைப் பார்க்கவும் என்று உழவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். அப்படித் திறந்து விட்டால் தான் தஞ்சாவூர், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் குறைந்த பட்சம் 5.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடக்கும். கடந்த ஆண்டு இலக்கை மிஞ்சி 7 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்தது என்றால் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனையாகும்.**

திராவிட மாடல் ஆட்சியில் மேட்டூர் அணை மிகச் சரியாக ஜூன் 12 அன்று திறந்து வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு முன்கூட்டியே - மே 24 ஆம் தேதியே திறந்து விடப்பட்டது. அத்தகைய சாதனையைச் செய்தவர் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். விஜய் ஆட்சியில் முதல் ஆண்டே ஜூன் 12 அன்று மேட்டூர் அணையை திறந்து விட முடியவில்லை. இதனால் டெல்டா மாவட்டத்தில் குறுவை சாகுபடி பொய்த்துப் போனது.

**“காவிரி நீர் கிடைக்கவில்லை. ஆற்று நீர் கிடைக்காவிட்டால் குறுவை பயிர்கள் கருகும். பம்பு செட் பாசனத்தாலும் குறுவை சாகுபடியை முழுமையாக முடிக்க முடியாது. மும்முனை மின்சாரமும் சரிவர கிடைக்கவில்லை. இவை இரண்டுமே மிகப் பெரிய சிக்கலை உழவர்களுக்குக் கொடுத்துள்ளது. இதைப் பற்றி எல்லாம் முதலமைச்சர் விஜய் கவலைப்படவில்லை.**

மேட்டூரில் தண்ணீர் இல்லை, அதனால் திறந்து விடவில்லை என்று அலட்சியமாகப் பதில் சொல்ல முடியாது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மே மாதத்தில் 2.5 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக மாநிலம் திறந்து விட்டிருக்க வேண்டும். ஜூன் மாதத்தில் 9.19 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக அரசு காவிரியில் திறந்திருக்க வேண்டும். ஆனால் அங்குள்ள அணைகளில் போதிய தண்ணீர் இல்லை என்று சொல்லி காவிரியில் தண்ணீர் திறக்கவில்லை. இது ஒவ்வொரு தடவையும் சொல்வது தான். மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கும் விஜய், கர்நாடக அரசிடம் முறையாகப் பேசி தண்ணீரைப் பெற்றிருக்க வேண்டும். கர்நாடக அரசுக்கு நெருக்கடி கொடுத்திருக்க வேண்டும். அவரே போய் கர்நாடக முதலமைச்சரைச் சந்தித்திருக்க வேண்டும். அல்லது ஒரு குழுவை கர்நாடகாவுக்கு அனுப்பி இருக்க வேண்டும்.

**கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இங்கும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிதான் நடக்கிறது. இரண்டுக்கும் பொதுவானது காங்கிரஸ் தலைமை. ராகுல் காந்தியிடமே இந்தப் பிரச்சினையை கொண்டு செல்லலாமே? பிரவீன் சக்கரவர்த்திக்கு இதைவிட என்ன வேலை இருக்கிறது? அவர் எம்.பி.ஆக வேண்டும் என்பதற்காகத் தான் ஒரு கூட்டணியையே உடைக்கும் வலிமை படைத்தவர் ஆச்சே? தமிழ்நாட்டு உழவர்களுக்காக கர்நாடக அணை தண்ணீரை காவிரியில் திறந்து விடும் சக்தி படைத்தவர் ஆச்சே அவர்? ஏன் இந்த முயற்சிகளை எல்லாம் எடுக்கவில்லை விஜய்?**

மேகதாது அணை கட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தொடங்கி விட்டார். டெல்லியில் தங்கி இதற்கான அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார். அந்த அணை கட்டப்பட்டால் தமிழ்நாடு காவிரி நீரை மறந்துவிட வேண்டியது தான். பல லட்சம் ஏக்கர் விவசாயம் கேள்விக்குறி ஆகிவிடும். அந்த ஆபத்தைக் கூட முதலமைச்சர் விஜய் உணரவில்லை.

**அவருக்கு மக்கள் மீது துளியும் அக்கறை இல்லை. அவருக்கு இதுபோன்ற பிரச்சினைகளை உள்வாங்கும் சக்தியும் இல்லை. ஒரே ஒரு நாள் பதவி ஏற்றதுடன் தனது கடமை முடிந்துவிட்டது என்ற மனநிலையில் அவர் இருக்கிறார். ‘நாடும் நாட்டு மக்களும் நாசமாகப் போகட்டும்’ என்ற நினைப்பில் நாட்களைக் கடத்துகிறார்.**

மூலப்பொருள் விலை உயர்வு - இயந்திர மானியம் மறுப்பு! ஜி.எஸ்.டி. கெடுபிடி, மின்கட்டணம் உயர்வு!

# கோவையில் அபாயக் கட்டத்தில் குறுந்தொழில் நிறுவனங்கள்!

## ஒன்றிய, மாநில அரசுகள் பாராமுகம்!

**கோவை, ஜூன் 17 -**

**ஒன்றிய, மாநில அரசுகளின் பாராமுகம் காரணமாக கோவையில் குறுந்தொழில் நிறுவனங்கள் அபாய கட்டத்தை நோக்கிச் செல்கின்றன.**

தமிழ்நாட்டில் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளன. கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்நிறுவனங்களில், இன்ஜினீயரிங், ஆட்டோ மொபைல், ரயில்வே, ராணுவம், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட பெரிய துறைகளை சார்ந்த நிறுவனங்கள் கொடுக்கிற ஜாப் ஆர்டர்கள் பெறப்பட்டு, அதற்கான உதிரிபாகங்கள் தயாரித்து கொடுக்கப்படுகின்றன.

விவசாயம் சார்ந்த டிராக்டர், மோட்டார், பம்புசெட், கிரைண்டர் தயாரிப்புகளுக்கு தேவையான உதிரிபாகங்களும் தயாரித்து கொடுக்கப்படுகின்றன. இந்நிறுவனங்கள், சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வரை மனிதவளத்தை மட்டுமே, நம்பியே இயங்கின. அந்த காலக்கட்டத்தில் உற்பத்தியும் தரமாக இருந்தது. ஆனால், உலகமயமாக்கலுக்கு பிறகு இக்குறுந்தொழில் நிறுவனங்கள் பெரும் சவாலை எதிர் கொண்டு வருகின்றன. உலகமயமாக்கல் கொள்கை அமலுக்கு வந்தவுடன், பெரிய நிறுவனங் கள், பெரிய நிறுவனங்கள், உதிரிபாகங்கள் வேண்டி சர்வதேச அளவில் தேடுதல் வேட்டையை துவக்க ஆரம்பித்தனர். இதனால், உள்ளூரில் இயங்கி வந்த குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஜாப் ஆர்டர் குறைய துவங்கியது. முன்பெல்லாம், 100 சதவீதம் லாபம் சம்பாதித்து வந்த இக்குறுந் தொழில் நிறுவனங்கள் தற்போது 5 சதவீதம் லாபம் பெறுவதற்கே படாதபாடு படுகின்றன. பல குறுந்தொழில் நிறுவனங்களில், ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை உள்ளது.

இந்த சூழலில் ஒன்றிய, மாநில அரசுகளின் நடவடிக்கை இத்தொழிலுக்கு விரோதமாகவே அமைந்துவிட்டன. ஒன்றிய அரசின் வங்கிக்கடன் மறுப்பு, கொரோனா முடக்கம், பணம் மதிப் பிழப்பு, ஜிஎஸ்டி வரி, மூலப்பொருள் விலை உயர்வு, மாநில அரசின் மின் கட்டணம், லைசென்ஸ் கட்டணம். தொழில்வரி போன்றவை இத்தொழிலை புரட்டி எடுத்துவிட்டது. இனி எக்காலத்திலும் இத்துறை எழுந்து நிற்கவே முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக குறுந்தொழில் முனைவோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி கோவை தொழில் கூட்டமைப்பு (போசியா) தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜேம்ஸ் கூறியதாவது: தமிழ்நாடு அரசின் மின்சாரத்துறை, நிலைக் கட்டணம் என்கிற ஒரு கட்டணத்தை குறுந்தொழில் நிறுவனங்கள் மீது திணிக்கிறது. முன்பு ஒரு கே.வி.ஏ.வுக்கு 35 ரூபாய் என்றிருந்த நிலைக் கட்டணம் தற்போது 165 ரூபாயாக உயர்த்தப்பட்டு விட்டது. அதாவது, பயன்படுத்தாத மின்சாரத்துக்கு மாத கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இதே போல மின்இழப்பு கட்டணம் செலுத்த வேண்டும் என “பவர் பேக்” கொண்டு வந்துள்ளார்கள். கோவை மாவட்டத்தில் சுமார் 40 சதவீதம் குறுந்தொழில் ஆலைகள் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இவற்றுக்கு வாடகை கொடுக்க முடியாமல் திணறும் நேரத்தில், சொத்து வரி விதிப்பு, ஆலைகளுக்கு ரன்னிங் லைசென்ஸ் இதுபோன்ற பேரிடிகளை மாநில அரசு இறக்கிக்கொண்டே இருக்கிறது.

குறுந்தொழில் நிறுவனங்களின் நிதிச்சுமையை குறைப்பதற்காக சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு, இயந்திர மானியம் திட்டம் அமல்படுத்தப்பட்டது. புதிதாக இயந்திரங்கள் வாங்கும்போது 25 சதவீதம் மானியம் தமிழக அரசால் வழங்கப்படும். ஆனால் மாவட்ட தொழில்மையம் 25 சதவீதம் கூடுதல் உற்பத்தி காட்டினால் மட்டுமே மானியம் தருவோம் என கெடுபிடி செய்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மட்டும் கடந்த 3 ஆண்டுகளில், சுமார் 5 கோடி ரூபாய்க்கும் அதிகமாக மானியத் தொகை நிலுவை உள்ளது. குறுந்தொழில் நிறுவனங்களுக்கு 5சதவீத வட்டியில் வங்கிக்கடன் வழங்கவேண்டும் என நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளில் 15 சதவீதம் வட்டி வசூலிக்கிறார்கள்.

குறுந்தொழில் நிறுவனங் களுக்கு தேவையான காப்பர், அலுமினியம், காஸ்டிங், இரும்பு தாது, எஸ்.எஸ்.மெட்டீரியல் போன்றை கொள்முதல் செய்யும்போது. அதற்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி விதிக்கிறார்கள். இவற்றை பொருட்களாக வடிவமைத்து, பெரிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் போது. அதற்கும் 18 சதவீதம் ஜி.எஸ்.டி வரி விதிக்கிறார்கள்.

இப்படி அடி மேல் அடி கொடுத்தால், இந்த ஆலைகளை எப்படி இயக்க முடியும்? அதனால்தான் அன்றாடம் பல குறுந்தொழில் நிறுவனங்கள் மூடும் அளவுக்கு நிலைமை மோசமாக செல்கிறது. சீர்திருத்த நடவடிக்கைகளை ஒன்றிய, மாநில அரசும் இணைந்து மேற்கொண்டால், இத்துறை பிழைக்கும். இல்லையேல், குறுந்தொழில் துறையின் அழிவை யாராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

பச்சிளம் குழந்தைகள் சீரழிக்கப்படும் உச்சக்கட்டம்!

# முதல்வரின் “மாற்றத்திற்கான” லட்சணம் இதுதானா?

## கழக தகவல் தொழில்நுட்ப அணி கண்டனம்!

*சென்னை, ஜூன் 17 -*

*“பச்சிளம் குழந்தைகள் சீரழிக்கப்படுவது தான் முதல்வரின் மாற்றத்திற்கான லட்சணமா?” என்று கழக தகவல் தொழில்நுட்ப அணி கேள்வி எழுப்பியுள்ளது.*

*இதுகுறித்து கழக தகவல் தொழில்நுட்ப அணி தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-*

*பெண் குழந்தை பாலியல் கொலை! இன்னும் எவ்வளவு காலம் தான் தூங்குவது போல் நடிப்பீர்கள் ‘குறட்டை குமார் முதல்வரே’!*

**தி.மு.க. ஐ.டி.விங் கடும் கண்டனம்!**

*தமிழ்நாடு இதுவரை கண்டிராத மிகக் கேவலமான சட்டம்ஒழுங்கு சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது! கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது பச்சிளம் குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, முட்புதரில் வீசப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளது. அதே நாளில், பூந்தமல்லி அருகே 7 வயது சிறுமிக்கு பாலியல் கொடுமை செய்யப்பட்டுள்ளது.*

*பாதிக்கப்பட்ட இந்த ஏழைப் பெற்றோர்களின் வலியும், பச்சிளம் குழந்தைகளின் வேதனையும் உங்களுக்கு உறைக்கவில்லையா? பெத்தவங்களோட குமுறலும், நெஞ்சகப் பதற்றமும் புரியாத ஒரு இரக்கமற்றவர் முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருப்பது தமிழ்நாட்டின் சாபக்கேடு!*

*ஸ்ரீவைகுண்டத்திலும், சேலத்திலும் உங்கள் சொந்தத் தவெக கட்சியினர் பாலியல் அசிங்கங்களை அரங்கேற்றியபோது, அவர்களைக் கட்சியை விட்டு நீக்காமல், காப்பாற்ற முற்படுகிறீர்களே, அதன் விளைவு தான் இன்று கும்மிடிப்பூண்டி யிலும், பூந்தமல்லியி லும் பச்சிளம் குழந்தைகள் சீரழிக்கப்படும் இந்த உச்சக்கட்ட அவலம்!*

*நீங்கள் உண்மையான முதல்வரும் இல்லை, உங்களை ஆட்டுவிக்கும் நிழல் முதல்வர்களுக்கு இந்த குற்றங்கள் பற்றிய கவலையும் இல்லை என்பதால் தான், இன்று தமிழ்நாட்டில் காமக்கொடூரர்கள் பயமின்றித் திரிகிறார்கள்.*

*அடுத்து, சோஷியல் மீடியாக்களில் “இவர்தான் மாற்றம்” என மக்களை மூளைச் சலவை செய்து, அரியணையில் அமர்த்த பணிபுரிந்த Paid Influencers கூட்டமே, இப்பொழுது எங்கே போய் ஒளிந்து கொண்டீர்கள்? 3 வயதுக் குழந்தையின் மரணத்திற்கு உங்களின் அந்தப் போலி விளம்பரங்களும் ஒரு மிக முக்கியக் காரணம் என்பதை ஒப்புக்கொள் வீர்களா? உங்களின் ‘மாற்றத்தின்’ லட்சணம் இதுதானா?*

*இனியாவது தூங்குவது போல் நடிப்பதை நிறுத்தி விட்டு குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குங்கள்!*

*இவ்வாறு கழக தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டுள்ள சமூக வலை தளத்தில் கூறப்பட்டுள்ளது.*

திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் – காக்களூரில்

# ‘GEN Z தி.மு.க.’ இளைஞர் சந்திப்பு!

## சமூக ஊடகம், ஏ.ஐ. அரசியல் குறித்து உற்சாக விவாதம்!

திருவள்ளூர், ஜூன் 17–

திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட காக்களூரில் இளம் தலைமுறையினரின் அரசியல் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் ”GEN Z தி.மு.க. என்ற தலைப்பில் சிறப்பு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந் நிகழ்ச்சியில் திருவள்ளூர் ஒன்றியம் முழுவதிலுமிருந்து 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.



நிகழ்ச்சியில் இளம் தலைமுறையினரின் அரசியல் பங்களிப்பு, சமூக ஊடகங்களின் தாக்கம், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்த அரசியலின் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் கருத்துப்பரிமாற்றம் நடைபெற்றது. பல்வேறு துறைகளில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்களது அனுபவங்களையும், அரசியல் குறித்த பார்வைகளையும் பகிர்ந்து கொண்டனர். குறிப்பாக, ”சமூக வலைதளங்களில் களமாடுவோம், ”ஏ.ஐ. யுகத்தில் இன்றைய அரசியல் ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற அமர்வுகளில், சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்தி மக்களுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்தும் வழிமுறைகள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், தி.மு.க. அரசின் மக்கள் நலச் சாதனைகள், சமூக நீதி, கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், வேலைவாய்ப்பு, அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. திராவிட மாடல் ஆட்சியின் நோக்கங்கள் மற்றும் அதன் மூலம் பொதுமக்கள் பெற்றுள்ள நன்மைகள் குறித்து இளைஞர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் தற்போதைய த.வெ.க. அரசின் நிர்வாக செயல்பாடுகள் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். தேர்தல் வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றும், சட்டம்ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், விலைவாசி கட்டுப்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு போன்ற துறைகளில் அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்றும் கருத்து தெரிவித்தனர்.

மேலும், விளம்பர அரசியலை விட மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறமையான நிர்வாகமே காலத்தின் தேவை என்றும், மக்கள் உண்மை நிலையை ஆராய்ந்து வளர்ச்சிக்கும் மக்கள் நலனுக்கும் முன்னுரிமை அளிக்கும் அரசியல் அணுகுமுறைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில், தி.மு.க.வின் கொள்கைகள், சாதனைகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களை வீடுதோறும் எடுத்துச் செல்லவும், பொதுமக்களுடன் நேரடி தொடர்பை மேலும் வலுப்படுத்தவும் இளைஞர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த. எத்திராஜ், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ். சௌந்தரராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். திலீபன், ஒன்றிய நிர்வாகிகள் கே.கே. சொக்கலிங்கம், டி.கே. சீனிவாசன், பரமேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஜெயபால், ஜெகதீஷ், தேவி மற்றும் சிவாபிரகாஷ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்– புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு புத்தெழுச்சி–19 வேரை விழுதுகள் போற்றும்! முத்தமிழ் கொடியை ஏற்றும்!!எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 15.06.2026 அன்று பகுதிச் செயலாளர் வி. சுதாகர் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, புத்தாடைகள், பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, உபகரணங்கள், திருநங்கைகளுக்கு நல உதவி,புத்தாடை வழங்கியும் மற்றும் இரத்த தானம் அளித்தவர்களுக்கு சிறப்பு செய்தும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் செல்வி திவ்யா சத்யராஜ் ஆகியோர் நலத் திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்துரைத்தனர். இந்நலத் திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், சொ.வேலு எம்.சி., தமிழன் பிரசன்னா, கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.